NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 28 February 2015

# புதிய பட்டதாரிகளின் சம்பளம் உயர்வு: ஆய்வு

பள்ளியிலிருந்து பாதியிலேயே விலகுவோர் கல்வி, வேலைத் திட்டங்கள் மூலம் தங்களைத் தாங்களே முன்னேற்றிக் கொள்ள அரசு புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தி வரும் வேளையில் பட்டக் கல்வி வேலைவாய்ப்புகளிலும் சம்பளங்களிலும் முக்கியப் பங்காற்றுவதை அண்மைய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு பட்டம் பெற்றவர்களின் சராசரி சம்பளம் இதுவரை காணாத அளவு $3,200க்கு உயர்ந்தது. இதுவே 2013ஆம் ஆண்டில் $3,050ஆக இருந்தது என நேற்று வெளியிடப்பட ஆய்வின் முடிவுகள் தெரிவித்தன.

வேலைவாய்ப்பு விகிதம் அதே உயர்மட்டத்தில் இருந்தது. பத்தில் 9 பேருக்குத் தங்கள் பட்டப்படிப்பை முடித்த ஆறு மாதங்களில் வேலை கிடைத்தது. நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் மொத்தம் 13,565 பட்டதாரிகளில் 10,126 பேர் இந்தக் கூட்டு ஆய்வில் கலந்து கொண்டனர்.

இந்த மூன்று பல்கலைக் கழகங்களும் கட்டட வடிவமைப்பு, உயிர்மருத்துவம் (சீன பாரம்பரிய மருத்துவம்), சட்டம், மருத்துவம், மருந்தகம் ஆகிய துறைகளில் பயிலும் கிட்டத்தட்ட 638 பட்டதாரிகளிடம் தனியாக ஓர் ஆய்வையும் நடத்தின.

இந்தத் துறைகளின் மாணவர்கள் முறையாக வேலை பார்ப்பதற்கு முன்பாகக் குறைந்தது ஓர் ஆண்டு செயல்திறன் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தப் பிரிவைச் சேர்ந்த பட்டதாரி களின் ஒட்டுமொத்த வேலை வாய்ப்பு 98.9 விழுக்காட்டில் இருந்தது. இவர்களில் பெரும்பாலானோர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தங்கள் பட்டப்படிப்பை முடித்தவர்கள்.

இவர்களில் முழுநேர வேலை பார்ப்பவர்களின் சராசரி மாதச் சம்பளம் கடந்த ஆண்டு $4,800ஆக இருந்தது. இதுவே 2013ஆம் ஆண்டு $4,500ஆக இருந்தது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.